**செய்தி வெளியீடு எண்: 399** **நாள்: 21.06.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில், திருவள்ளூர் மாவட்டம், பெத்திக்குப்பத்தில் 137 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன ஒருங்கிணைந்த சோதனை சாவடியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, உள் (போக்குவரத்து) துறையின் மூலமாக, ஓட்டுநர் மற்றும் நடத்துநர் உரிமங்களை வழங்குதல், வாகனங்களை பதிவு செய்தல், வாகனங்களை ஆய்வு செய்து தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்குதல், மோட்டார் வாகனங்கள் மீதான வரி மற்றும் கட்டணங்களை வசூல் செய்தல், மோட்டார் வாகனச் சட்டங்களின் கீழ் சாலையில் வாகனங்களை ஆய்வு செய்தல், வாகனங்கள் வெளியேற்றும் புகையின் அளவை கணக்கிடுவதற்கு புகைப் பரிசோதனை நிலையங்கள் அமைப்பதற்கான உரிமம் வழங்குதல், சாலை விபத்துகளை குறைப்பதற்காக சாலை பாதுகாப்பு விதிகளை கண்டிப்புடன் செயல்படுத்துதல் போன்ற பணிகளை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு – ஆந்திர மாநில எல்லை வழியாக, மோட்டார் வாகன வரி செலுத்தாமலும், அனுமதிச் சீட்டுக்கு புறம்பாகவும் இயக்கப்படும் வாகனங்களை நவீன தொழில்நுட்பத்துடன் ஒரே இடத்தில், போக்குவரத்து துறையுடன் இதர துறைகளான காவல் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, வணிகவரித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து ஆய்வு செய்யும் வகையில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், இலாவூர் கிராமம், சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பெத்திக்குப்பத்தில் 137 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உள் வருகை மற்றும் வெளி செல்கை வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள நவீன ஒருங்கிணைந்த சோதனை சாவடியை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்த நவீன ஒருங்கிணைந்த சோதனை சாவடியின் மூலம், வாகன நெரிசலை கட்டுப்படுத்தவும், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் வெளிமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களுக்காக 10 வழிப்பாதைகளும், தமிழ்நாட்டிலிருந்து வெளியே செல்லும் வாகனங்களுக்காக 6 வழிப்பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளது. அளவுக்கதிகமாக பாரம் ஏற்றிச் செல்லும் வாகனங்களையும், அரசுக்கு வரி ஏய்ப்பை ஏற்படுத்தும் வாகனங்களையும் கால விரயமின்றி விரைவாக கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பல்வேறு துறைகள் மூலம் வெவ்வேறு இடங்களில் நிறுத்தி சோதனை செய்வதற்கு பதிலாக ஒரே இடத்தில் நிறுத்தி காலவிரயமின்றி சோதனை மேற்கொள்ளவும் இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி. பலராமன் மற்றும் திரு.கே.எஸ். விஜயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., போக்குவரத்து ஆணையர் திரு.சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.6.2018**